# *மலைப் பிரசங்கம் 02 – ஆவியில் எளிமை*

***மத்தேயு 5:3, ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.***

*மத்தேயு 5ஆம் அதிகாரமானது மகிழ்ச்சியைக் குறித்த பிரபலமான வேதப்பகுதி. அதே சமயத்தில் சற்று முரணான வேதப்பகுதியும் கூட.*

*இது இயேசு கிறிஸ்துவின் அனைத்து போதனைகளுக்கும் அடிப்படையானதும், அவருடைய இராஜ்யத்திற்கான திறவுகோலாகவும் அமைந்திருக்கிறது. நாம் மகிழ்ச்சியாயிருக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.*

***சங்கீதம் 144:15, இவ்விதமான சீரைப்பெற்ற ஜனம் பாக்கியமுள்ளது; கர்த்தரைத் தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது.***

*நம்முடைய வாழ்க்கை மகிழ்ச்சியாய் இருக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.*

*தேவன் நம்மை ஆசீர்வதிக்க விரும்புகிறார்.*

*நாம் ஆசீர்வாதத்தையும் உள்ளான மகிழ்ச்சியையும் அனுபவிக்க வேண்டும் என்றும் மாறுகின்ற சூழ்நிலைகளினாலும் உணர்வு ரீதியாய் பாதிக்கப்படக்கூடாது என்றும் தேவன் விரும்புகிறார்.*

*விசுவாசிகளின் குணாதிசயங்கள் ஆசீர்வதிக்கப்பட்டதாயும், மகிழ்ச்சியுள்ளதாயும், சந்தோஷமாயும் இருக்கவேண்டும். அதைத் தான் அவருடைய இராஜ்யம் நமக்கு வாக்களிக்கிறது!*

*இயேசு அவருடைய சீஷர்களோடு பேசிக்கொண்டிருக்கிறார். அவருடைய சீஷர்களைக் கடந்து பலதரப்பட்ட மக்கள் அவருடைய போதனையைக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.*

*வழக்கமாய் உலகம் எதை ஊகிக்குமோ அதற்கு எதிர்மறையான கருத்துக்களையே மலைப் பிரசங்கம் போதிக்கிறது.*

- *ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஐசுவரியவான்களே பாக்கியவான்கள் என்று உலகம் சொல்லுகிறது.*
- *துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; சிரித்து மகிழ்ச்சியாய் இருக்கிறவர்களையே பாக்கியவான்கள் என்று உலகம் சொல்லும்.*
- *சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பெருமையுள்ளவர்களும் மனவுறுதியுள்ளவர்களுமே பாக்கியவான்கள் என்று உலகம் சொல்லுகிறது.*
- *நீதியின் மேல் பசி தாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பசி தாகமில்லாதவர்களே பாக்கியவான்கள் என்று உலகம் சொல்லுகிறது.*

*நாம் உலகத்தால் செதுக்கப்படுகிறோம். இராஜ்யத்திற்குரிய நம்மில் அநேகருடைய சிந்தையும் உலகத்தாலேயே செதுக்கப்படுகிறது.*

*சமூக ஊடகங்கள் (செய்தித்தாள், புத்தகங்கள், வார இதழ்கள், தொலைக்காட்சி, வானொலி, இசை, காணொலிகள் மற்றும் பல) உலகத்தின் பார்வைக்கு நம்மை ஈர்த்து, கடைசியில் நம்முடைய நற்சிந்தையை கறையாக்கி விடுகின்றது.*

*சீஷர்களோடு சேர்ந்து தேவனுடைய இராஜ்யத்தை மெய்யாய் புரிந்துகொள்ள விரும்பும் மக்கள் இருக்கிறார்கள். ஆனால் உலகத்தை ஆளும் மார்க்க தலைவர்களின் தத்துவங்களினால் அவர்களுடைய சிந்தை கறைபடிந்திருக்கிறது.*

*அந்த பொய்களையும் பிழைகளையும் இயேசு தெளிவாக்கி மெய்யான சந்தோஷத்திற்கு அவர்களை வழிநடத்தவேண்டும்.*

*தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கும்போதே இந்த மெய்யான மகிழ்ச்சியை நாம் அடையமுடியும்.*

*ஆகையால் நாம் எப்படி மகிழ்ச்சியாயிருக்க முடியும் என்பதை போதிக்கும் போதனை மட்டுமல்லாது, தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பது எப்படி என்றும் போதிக்கப்படுகிறோம். ஏனென்றால், இரண்டுமே ஒன்றுதான்.*

*தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கும்போதே மகிழ்ச்சியை அடையமுடியும்.*

*தேவனுடைய இராஜ்யத்திற்கு வெளியே நிலையான மகிழ்ச்சி கிடைக்க வாய்ப்பில்லை.*

*மகிழ்ச்சி என்பதற்கு "**மக்காரியோஸ்**" என்ற கிரேக்கப் பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. எல்லா நன்மைகளையும் பாக்கியங்களையும் பெற்றுக்கொள்ளும் தேவ ஜனத்திற்கு பாக்கியவான் என்று பயன்படுத்தப்பட்டுள்ளது. அதுவே மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.*

*ஆசீர்வாதம் என்ற பதத்திற்கு எதிர்பதம் உள்ளது. கிரேக்கத்தில் "**ஊய்**" என்ற பதத்திற்கு சாபம் என்று பொருள். அது "ஐயோ" என்று மொழிபெயர்க்கப்படுகிறது.*

*மக்களின் நிலையை ஐயோ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.*

*ஆசீர்வாதத்தை பொழிகிற இடமே தேவனுடைய இராஜ்யம்.*

***எபேசியர் 1:3, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.***

*நாம் இராஜ்யத்திற்கு உட்படும்போது ஆசீர்வதிக்கப்பட ஆரம்பிக்கிறோம். எபேசியர் 2ஆம் அதிகாரத்தில், ஆசீர்வாதமானது என்றென்றும் நிலைத்திருக்கக்கூடியது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தேவன் அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவின் மூலம் அவருடைய கிருபையின் ஐசுவரியத்தில் நமக்கு வெளிப்படுவார்.*

*நாம் தேவனுடைய இராஜ்யத்திற்கு உட்பட்ட நாளிலிருந்து அவர் நம்மை ஆசீர்வதிக்கத் துவங்குகிறார்.*

*நம்மை மெய்யாய் சந்தோஷப்படுத்த தேவையான அனைத்து அசீர்வாதங்களையும் அவர் நமக்கு அருளுகிறார்.*

*இந்த மகிழ்ச்சியானது நித்தியத்திற்கும் நிலைக்கக்கூடியதாயிருக்கிறது.*

*நமக்கு மகிழ்ச்சி, மனநிறைவு, ஆசீர்வாதம், சந்தோஷம் போன்றவற்றை அருளும் பொருட்டு நமக்கு இரட்சிப்பைக் கொடுத்திருக்கிறார். இந்த ஆசீர்வாதத்தை அடையும் பாதையையும் தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பது எப்படி என்பதையும் இந்த மலைப்பிரசங்கம் போதிக்கிறது.*

*அது ஆவியில் எளிமையாயிருப்பதிலிருந்து துவங்கி, துயரம், சாந்தகுணம், நீதியின் மீதான பசி தாகம் என்று ஒன்றன்பின் ஒன்றாய் தொடருகிறது.*

*உலகம் நம்மீது சுமத்தும் பொய்யான குற்றச்சாட்டுகள், உபத்திரவம் போன்ற சூழ்நிலைகளை முன்வைத்து, இரக்கம், பரிசுத்தம், சமாதானம் பண்ணுதல் போன்ற சுபாவங்களை ஊக்குவிக்கிறது. ஆனால் கடைசியில் அது நம்முடைய வாழ்க்கையை ஒளியாகவும் (வச. 13) உப்பாகவும் (வச. 14-16) மறுரூபமாக்குகிறது. இதுவே மலைப்பிரசங்கத்தின் சிறப்பு.*

- *நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் வறுமை நிலையை அறிந்து ஆவியில் எளிமையாயிருப்பதே தேவனுடைய இராஜ்யத்திற்குள்ளும் மகிழ்ச்சிக்குள்ளும் நுழைவதற்கான முதலாவது படி.*
- *இரண்டாவது, அதைக் குறித்து புலம்புவது.*
- *மூன்றாவது, உங்களுடைய இக்கட்டான சூழ்நிலையிலும் தேவனுக்கு முன்பாக தாழ்ந்து இருப்பது.*
- *நான்காவது, உங்களிடத்தில் இல்லாத நீதிக்காய் ஏங்குவது.*
- *இவைகள் மற்றவர்களின் மீது இரக்கமுள்ளவர்களாய் உங்களை மாற்றுகிறது.*
- *அது இருதயத்தில் சுத்தமனசாட்சியுள்ளவர்களாய் உங்களை மாற்றுகிறது.*
- *உங்களுடைய வாழ்க்கையில் சமாதானம் பண்ணுகிறவர்களாய் நீங்கள் மாறுகிறீர்கள்.*
- *இது உலகத்தில்; உங்களுக்கு விரோதத்தை ஏற்படுத்துகிறது.*
- *இதுவே மலைப்பிரசங்கத்தின் வரிசைக்கான தொடர்பு.*

***வச.3, ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.***

## *1. இயேசு ஏன் தன் போதனையை இப்படி துவக்குகிறார்?*

*இதுவே இயேசுவின் முதல் பதிவுசெய்யப்பட்ட செய்தி. புதிய ஏற்பாடு முழுவதும் அவர் போதித்த போதனையை இயேசு இன்னவிதமாகவே துவக்குகிறார்.*

*இதுவே கிறிஸ்தவர்களின் அடிப்படை குணாதிசயம்.*

*இதுவே பரலோக இராஜ்யத்தின் குடிமக்களுடைய அடிப்படை குணாதிசயம்.*

*இதிலிருந்தே மற்ற எல்லா குணாதிசயங்களும் வழிந்தோடுகிறது.*

இங்கிருந்தே மகிழ்ச்சியானது துவங்குகிறது. இங்கிருந்தே இராஜ்யத்தின் நுழைவாயில் துவங்குகிறது.

மேலும் இயேசு, நீங்கள் ஏறவேண்டிய மலை ஒன்று இருக்கிறது என்று கூறுகிறார். ஆனால் அதற்கு முன்பாக, நீங்கள் தேவனுடைய இராஜ்யத்திற்கு வெளியே இருக்கிறீர்கள் என்பதையும் நீங்களாகவே அதற்குள் வருவது சாத்தியமில்லை என்பதையும் நீங்கள் உணரவேண்டும்.

அந்த மலையானது மிகவும் உயரமானது. நாம் ஏற முடியாத அளவிற்கு உயரமானது.

அந்த புரிதலோடு தான் நம்முடைய ஓட்டத்தைத் துவக்கவேண்டும். நீங்கள் உங்களுடைய இயலாமையையும் வறுமையையும் புரிந்துகொள்ளாமல், இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கவோ அல்லது மகிழ்ச்சியை அனுபவிக்கவோ முடியாது.

யூதர்கள் கீழ்க்கண்ட காரியங்களில் மேன்மைப்பாராட்டினார்கள்.

- விருத்தசேதனம்.
- உடன்படிக்கை சந்ததி என்று தங்களை அடையாளப்படுத்தினர்.
- மார்க்க ரீதியான சாதனைகள்.
- சடங்காச்சார ரீதியான சாதனைகள்.
- தேவனுக்கு அவர்கள் செலுத்திய பலிகள்.
- நியாயப்பிரமாணத்தைக் குறித்த அவர்களின் வைராக்கியம்.
- சுய நீதி.

அவர்கள் சுயத்தின் மீது நம்பிக்கைக் கொண்டவர்கள்.

ஆனால் இயேசு அவர்களை நோக்கி, நீங்கள் தேவனுடைய இராஜ்யத்திற்குள் நுழையவோ, மகிழ்ச்சியை அனுபவிக்கவோ வேண்டுமென்றால் நீங்கள் வெறுமையானவர்கள் என்று உங்களின் இயலாமை நிலையை உணரவேண்டும் என்று போதிக்கிறார்.

அங்கிருந்து தான் இவைகள் அனைத்தும் துவங்குகின்றது.

ஆவியில் எளிமை என்னும் இந்த குணாதிசயமே மற்ற எல்லா கிருபைகளுக்கும் அஸ்திபாரம்.

ஆவியில் எளிமையாயிருப்பதிலிருந்தே அனைத்தும் துவங்குகின்றது.

ஆவியில் எளிமையில்லாத மனிதன் மகிழ்ச்சியை அனுபவிப்பதற்கும் தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கும் பாத்திரவான் அல்ல.

*நீங்கள் உங்களுடைய சுயநீதி, சாதனைகள், ஒழுக்கம் ஆகியவைகளைக் குறித்து மேன்மை பாராட்டுகிற வரையில் நீங்கள் அதை அடைவது சாத்தியமில்லை.*

*தகுதியில்லாதவர்களுக்கே தேவன் மகிழ்ச்சியை வாக்குப்பண்ணுகிறார்.*

***ஏசாயா 61:1, கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும்,***

*நொறுங்குண்ட இருதயத்திலிருந்தே அனைத்தும் துவங்குகிறது.*

*தன்னுடைய ஆவியின் எளிமையை ஒருவன் அனுபவிக்காத பட்சத்தில் கிறிஸ்துவை சரியாய் பார்க்கமுடியாது. அவர் விலையேறப்பெற்றவராய் உங்களுக்குத் தெரியாது. நீங்கள் எவ்வளவு வெறுமையானவர்கள் என்பதை உணராதவரைக்கும் இயேசு எவ்வளவு விலையேறப்பெற்றவர் என்பதை நீங்கள் அறியமுடியாது.*

*உங்களுடைய தகுதியில்லா தன்மையை நீங்கள் உணருகிறவரை அவருடைய நிகரில்லா தன்மையை பார்க்கமுடியாது.*

*தங்களுடைய நீதியை அழுக்கான கந்தையாய் பார்த்தவர்கள் மட்டுமே கிறிஸ்து கொடுக்கும் நீதியின் அங்கியை தரித்துக்கொள்ளமுடியும்.*

- *நீங்கள் ஏழ்மையாய் இருக்கும் வரை ஐசுவரியத்தை நாட முடியாது.*
- *நீங்கள் மதியீனராயிருக்கும் வரை ஞானமுள்ளவராக மாற முடியாது.*
- *நீங்கள் வாழ்க்கையை இழக்கும் வரை அதை காத்துக்கொள்ள முடியாது.*

*இயேசு இதுபோன்ற முரண்பாடான காரியங்களை சொல்லியிருக்கிறார்.*

*பெருமையே தேவனுடைய இராஜ்யத்திற்குள் மக்களை நுழைய விடாமல் தடுக்கிறது.*

*பெருமையானது துவக்கத்திலேயே தகர்க்கப்படவேண்டும்.*

*நீதிமொழிகள் 16:5, மனமேட்டிமையுள்ளவனெவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்; கையோடே கைகோத்தாலும் அவன் தண்டனைக்குத் தப்பான்.*

*பெருமை என்பது நீங்கள் பணத்தின் மீது ஆசை கொண்டுள்ளீர்கள் என்று அர்த்தமாகாது.*

*பெருமை என்பது பொருட்கள் மீதிலும் ஆஸ்திகள் மீதிலும் நீங்கள் ஆசைகொண்டுள்ளீர்கள் என்று அர்த்தமாகாது.*

*பெருமை என்பது உங்களுடைய சாதனைகள், தனிப்பட்ட ஒழுக்கம், தனிப்பட்ட மார்க்கம், மற்றும் தனிப்பட்ட நன்மைகளின் மீது உங்கள் நம்பிக்கையை வைப்பதாகும்.*

*நீங்கள் அழுக்கான கந்தை என்று உணர்வதே நீங்கள் செய்யவேண்டிய முதன்மையான காரியம். உங்களுடைய இயலாமையை ஒத்துக்கொள்வதே தேவனுடைய இராஜ்யத்திற்கு வருவதற்கான அடிப்படை தகுதி. தேவனை பிரியப்படுத்த முடியாத இயலாமையையும், அவருடைய வரையறையை பூர்த்தி செய்யமுடியாத தகுதியற்ற நிலையையும்*

*ஒத்துக்கொள்ள வேண்டும். இதை புரிந்து கொள்வதற்கு பவுல் அப்போஸ்தலர் ஒரு நல்ல உதாரணம்.*

***பிலிப்பியர் 3:4-9, மாம்சத்தின்மேல் நம்பிக்கை வைக்கவேண்டுமானால் நானும் வைக்கலாம்; வேறொருவன் மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிருக்க நினைத்தால் நான் அதிகமாய் அப்படிச் செய்யலாம். 5. நான் எட்டாம் நாளிலே விருத்தசேதனமடைந்தவன், இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்திரத்தான், எபிரெயரில் பிறந்த எபிரெயன், நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன்; 6. பக்திவைராக்கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன், நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன். 7. ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். 8. அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். 9. நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும்,***

*பவுல் அப்போஸ்தலரைப் பார்க்கும்போது மத நல்லொழுக்கத்தின் ஒரு முன்மாதிரியாய் தெரிகிறார்.*

*தன்னுடைய மேன்மையெல்லாம் குப்பை என்று பவுல் கருதுகிறார்.*

*லவோதிக்கேயா திருச்சபை வஞ்சிக்கப்பட்டது.*

***வெளிப்படுத்தின விசேஷம் 3:17, நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதைஅறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும், சொல்லுகிறபடியால்;***

*அனைத்தும் இங்கிருந்தே துவங்குவதால், இயேசுவும் இதிலிருந்தே துவக்குகிறார். ஆவிக்குரிய இந்த எளிமையை நீங்கள் உணராதவரை நீங்கள் இராஜ்யத்திற்குள்ளும் மகிழ்ச்சிக்குள்ளும் பிரவேசிக்க முடியாது.*

***ஏசாயா 64:6, நாங்கள் அனைவரும் இலைகளைப்போல் உதிருகிறோம்; எங்கள் அக்கிரமங்கள் காற்றைப்போல் எங்களை அடித்துக்கொண்டுபோகிறது.***

*பிலிப்பியர் 3 – "குப்பை"*

*உங்களுடைய ஒழுக்கமானது அழுக்கான கந்தை. அங்கிருந்தே எல்லாம் துவங்குகின்றது.*

*அங்கிருந்தே இயேசுவும் துவக்குகிறார்.*

*ஆவிக்குரிய எளிமையை தங்களில் உணருகிறவர்களே தேவனுடைய ஆசீர்வாதத்தை அனுபவிக்க தகுதியுள்ளவர்கள்.*

*2. எந்த வகையான எளிமை?*

*பொருளாதார ஏழ்மையைக் குறித்து இயேசு இங்கு பேசவில்லை.*

*"ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்று எளிமையாய் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் ஒழுக்கநெறிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளதாய் அநேகர் இதைப் பார்க்கிறார்கள்.*

*பொருளாதாரம் மற்றும் பணக்குறைவுபட்ட ஏழ்மையான நிலைமையை அநேகர் ஏதோ ஒருவிதத்தில் ஆசீர்வாதமாகவே பார்க்கின்றனர்.*

*இயேசு அதைக் குறித்து இங்கு பேசவில்லை. ஒருவேளை அப்படியிருந்திருந்தால், மற்றவர்களுடைய பிரச்சனையை நிவிர்த்தி செய்வதற்கு நாம் கிறிஸ்தவராய் இருக்கவேண்டிய அவசியம் இருந்திருக்காது. கிறிஸ்தவம் என்பது ஏழைகளுக்கு பணம் கொடுப்பது அல்ல.*

*ஏழைகளுக்கு பொருளாதார ரீதியாய் இரங்கும்படிக்கும் தேவையுள்ளவர்களுக்கு உதவிசெய்யும்படிக்கும் வேதாகமம் நமக்கு தொடர்ந்து அறிவுறுத்துகிறது. ஏழ்மை என்பது ஒருவிதத்தில் ஆசீர்வாதம் என்று எடுத்துக்கொண்டாலும், அதை நம்புகிறவர்களை அந்த நம்பிக்கையிலிருந்து வேறொரு நம்பிக்கைக்கு கொண்டுசெல்லக் கடமைப்பட்டுள்ளோம்.*

*ஆசீர்வாதம் என்பது பொருளாதாரத்தோடு தொடர்புடையதாய் இருந்தால், பசியால் வாடுபவர்களை பட்டினியாய் விட்டுவிட்டு, போரினால் பாதிக்கப்பட்டவர்களை அவர்களின் இக்கட்டில் கைவிட்டுவிட்டு, ஆதரவற்றவர்களை நிற்கதியாய் விட்டுவிட்டு, மருத்துவமனைகள் அனைத்தையும் மூடிவிட்டு, அனைத்து ஊழியங்களையும் சேவைகளையும் நிறுத்திவிடுவது நல்லது. ஆனால் ஆசீர்வாதம் என்பது பொருளாதாரத்தோடு தொடர்புடையது அல்ல.*

*ஆவிக்குரிய ஆசீர்வாதமானது பொருளாதாரத்தோடு தொடர்புடையது என்னும் புது வகையான ஒரு சுவிசேஷம் இன்று பிரபலமாகிறது. எந்த அளவிற்கு நீங்கள் ஐசுவரியமுள்ளவர்களாயிருக்கிறீர்களோ அந்த அளவிற்கு நீங்கள் செழிப்பின் உபதேசத்திற்குள் இருக்கிறீர்கள் என்று அர்த்தம்.*

*இங்ஙனம் பொருளாதார ஆசீர்வாதங்களைக் குறித்து பேசவில்லை. பணக்காரனாகவோ அல்லது ஏழையாகவோ இருப்பதினால் ஒன்றும் பிரச்சனையில்லை. இராஜ்யத்திற்குள் வருகிற ஏழைகள் பெரும்பான்மை.*

*அங்கே சில பணக்காரர்களும் இருக்கின்றனர். அநேகர் அல்ல, எண்ணிக்கையில் குறைவானவர்கள். நிக்கோதெமு, அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு மற்றும் பிலேமோன் போன்றவர்கள் அவ்வகையான ஐசுவரியவான்கள்.*

***சங்கீதம் 37இல் தாவீது**, நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் காணவில்லை என்று கூறுகிறார்.*

*பவுலின் வாழ்க்கை பயணத்தில் அவர் பசியோடும் தாகத்தோடும் இருந்த நாட்கள் உண்டு. அவமதிக்கப்படுவது எப்படி என்பதும் வளருவது எப்படி என்பதும் அவருக்கு தெரியும் என்று அவர் பிலிப்பிய திருச்சபை விசுவாசிகளுக்கு அவர் சொல்லுகிறார்.*

*மற்றவர்களிடத்தில் கெஞ்சி பிச்சையெடுக்கும் நிலை ஏற்படுவதில்லை. இயேசுவை பரம ஏழை என்று சிலர் கருதுகின்றனர். ஆனால் அது உண்மையில்லை. அவர் ஒரு நடுத்தர வர்க்கத்திற்கும் மேலான குடும்பத்திலேயே வளர்க்கப்பட்டார். அவருடைய தகப்பனாருக்கென்று சொந்த தொழில் இருந்தது. அவர் ஒரு தச்சன்.*

*இயேசுவும் தொழில் செய்யப் பழகியே வளர்ந்தார். அவர் எப்போதும் பயணம் செய்துகொண்டேயிருந்த பிரசங்கியாராய் இருந்ததினால் அவர் தொழில் ஏதும் செய்யவில்லை. மேலும் அவருடைய ஊழியத்தின் மூலம் பயனடைந்தவர்கள் அவருக்கு அவ்வப்போது பொருளுதவி செய்து உதவியதால், அவருக்கு தொழில் செய்யப்படவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஆனால் அவர்களிடத்தில் பணம் இருந்தது. தங்கள் தேவை போக மற்றவர்களுக்கு கொடுக்கும் அளவிற்கும் அவர்களிடத்தில் பணம் தங்கியது.*

*யூதாஸ் தன்னிடத்தில் வைத்திருந்த பணப்பையில் சீஷர்களின் தேவைகள் போக ஏழைகளுக்கு உதவி செய்வதற்கும் பணம் வைப்பு இருந்தது. இயேசு பணத்திற்காய் யாரிடத்திலும் இரங்கியதில்லை. பன்னிரண்டு சீஷர்களும் இரங்கியதில்லை. பவுலும் இரங்கியதில்லை.*

*அவர்கள் பேதையாயிருக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டனர். பைத்தியங்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டனர். அவர்கள் உலகத்தை தலைகீழாக்கிவிட்டார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டார்கள். ஆனால் அவர்கள் தங்கள் தேவைக்காய் பிச்சையெடுத்தனர் என்று குற்றஞ்சாட்டப்படவில்லை. அவர்கள் ஏழ்மையான நிலையிலிருந்து வந்தவர்களாதலால் ஏதோ சில நற்குணங்களை உடையவர்களாயிருந்தனர்.*

***ஆவியில் எளிமை என்றால் என்ன?***

*"**டோகோஸ்**" என்னும் கிரேக்கப் பதம்.*

***டோகோஸ்** என்றால் பிச்சைக்காரனைப் போல் நடுங்கி இரங்குவது.*

*நிஜமாகவே ஒடுங்கி, சுருங்கிய மனிதன் பிச்சையெடுப்பதற்கு வெட்கப்படுவான். ஆனால் அவனுக்கு வேறு வழியில்லை.*

*வசதியில்லாத, செல்வாக்கு இல்லாத, எந்த பதவியிலும் இல்லாத, கனம் இல்லாத, மரியாதை இல்லாத, தான் உடுத்தியிருக்கிற வஸ்திரத்தைத் தவிர்த்து ஏதுமில்லாத ஒரு உண்மையான பிச்சைக்காரனை இங்கு குறிப்பிடுகிறது.*

*புதிய ஏற்பாட்டில் ஏழை என்பதற்கு பயன்படுத்தப்பட்ட இன்னொரு வார்த்தை "பெனேஸ்."*

***2 கொரிந்தியர் 9:9, வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும் என்று எழுதியிருக்கிறபடியாகும்.***

*இது வித்தியாசமான ஏழ்மை.*

*ஒவ்வொரு நாளும் புத்திகூர்மையோடான உழைப்பு தேவைப்படுகிற ஏழ்மை இது. வங்கியில் சேமிப்பு இல்லாதவர்கள் தாங்கள் ஆகாரம் உண்ணுவதற்கு அனுதினமும் உழைக்கவேண்டியுள்ளது. ஒவ்வொரு நாளும் உன்னுடைய தேவைக்காய் நீ உழைத்து*

*வாழ்வாதாரத்தை நாடும் தினக்கூலியின் வறுமையைக் குறிக்கும் பதமே இந்த ''**பெனேஸ்**.''*

***டோகோஸ்*** *என்னும் வார்த்தையானது, எந்த வாழ்வாதாரமும் இல்லாமல், வறுமையின் கோரத்தில் நின்று, பிச்சையெடுப்பதைத் தவிர்த்து வேறு வழியே இல்லை என்னும் நிலை. வேலை செய்யும் வாய்ப்போ திறமையோ உனக்கு இல்லை. உழைக்கும் திறமை உனக்கு இல்லை. ஆகையால் மற்றவர்களின் கைகளை எதிர்பார்த்தே நீ வாழவேண்டியிருக்கிறது. அனைத்தும் மற்றவர்களிடமிருந்தே உனக்கு வருகிறது.*

*உனக்கு எந்த வாழ்வாதாரமும் இல்லை, திறமையில்லை, கைத்தொழில் இல்லை, வணிகம் செய்யும் திறன் இல்லை, எதுவுமேயில்லை. இதுபோன்ற வறுமையின் உச்ச நிலையில் இருக்கும் பண்டைய காலத்தின் மக்கள், தாங்கள் யாரென்று மற்றவர்களுக்கு தெரிந்தால் அவமானம் என்று கருதி, தங்களின் துணியைக் கொண்டு தங்கள் முகத்தை மறைத்துக்கொண்டு பிச்சையெடுப்பது வழக்கம். அந்த வார்த்தையைத் தான் இயேசு பயன்படுத்துகிறார்.*

***நீ தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க விரும்புகிறாயா?***

*இந்த வெறுமையாக்கப்பட்ட உணர்வை எந்த மனிதன் உணருகிறானே அவனே தேவனுடைய மகிழச்சியின் இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கிறான்.*

*நீங்கள் உங்களை வெறுமையாய், எளிமையாய், உதவியற்றவர்களாய், இழப்படைந்தவர்களாய், உங்களுடைய சொந்த இரட்சிப்பிற்கு ஏதும் செய்ய இயலாதவர்களாய், தேவனிடத்தில் எதையொன்றையும் கொடுத்து ஆசீர்வாதத்தை வாங்க திராணியற்றவர்கள் என்று கருதும்போதே நாம் தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க தகுதிப்படுத்தப்படுகிறோம்.*

*நீங்கள் ''பெனேஸ்'' அல்ல, ''டோகோஸ்.''*

*உங்களுக்கு இரக்கம் தேவை.*

*இன்னொருவரிடமிருந்து உங்களுக்கு ஆதரவு தேவை. அது தேவனே. அதற்கு உங்களால் எதையும் விலைக்கிரயமாய் கொடுக்க முடியாது.*

*நீங்கள் ஆதரவற்றவர்கள், இரங்கித் திரிகிறவர்கள், உதவிக்கு மற்றவர்களை சார்ந்திருக்கிறவர்கள்.*

- *ஆதரவற்றவர்கள் பாக்கியவான்கள்,*
- *இரங்கித் திரிகிறவர்கள் பாக்கியவான்கள்,*
- *உதவிக்கு அடுத்தவர்களை சார்ந்திருக்கிறவர்கள் பாக்கியவான்கள்.*
- *எதுவுமேயில்லாதவர்களும், எதையுமே சம்பாதிக்க திராணியில்லாதவர்களும் பாக்கியவான்கள்.*

*இந்த வறுமையே ஆவியில் எளிமை என்று விவரிக்கப்பட்டுள்ளது.*

*இது பணமில்லாமல் அல்லது மற்ற பொருளாதார குறைவினால் ஏற்படுகிற வறுமையில்லை.*

*இது வெளிப்புறமான காரியங்களின் குறைவினால் ஏற்படுகிற வறுமை அல்ல. மாறாக, உள்ளான ஆவியில் ஏற்படுகிற வறுமை.*

*உள்ளே ஆய்ந்து பார்த்து, உங்களுடைய ஆவிக்குரிய வெறுமையை உணருங்கள். இதுவே இயேசு பாவிகளுக்கு போதித்த முதல் செய்தி.*

*உங்களுடைய ஆவிக்குரிய எழ்மை நிலையை உணருங்கள்.*

*தாங்கள் ஆவியில் மேன்மையானவர்கள் என்றும் தங்கள் சுய நீதியின் நிமித்தம் தாங்கள் இரட்சிக்கப்பட்டுவிட்டோம் என்றும் எண்ணிக்கொண்டிருக்கிறவர்களிடம் இயேசு இந்த செய்தியை பிரசங்கிக்கிறார்.*

***ஏசாயா 66:2, என்னுடைய கரம் இவைகளையெல்லாம் சிருஷ்டித்ததினால் இவைகளெல்லாம் உண்டாயின என்று கர்த்தர் சொல்லுகிறார்; ஆனாலும் சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்ப்பேன்.***

*தன்னுடைய ஆவிக்குரிய வறுமையையும் வெறுமையையும் உணர்ந்து நியாயத்தீர்ப்புக்கு அஞ்சி, தேவனுடைய கோபாக்கினையிலிருந்து தப்பித்துக்கொள்ள வழியே இல்லை என்று மெய்யாய் உணருகிறவனே ஆவியில் எளிமையுள்ளவன்.*

***சங்கீதம் 34:18, நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்.***

*தேவன் யாரை இரட்சிக்கிறார்?*

*தாங்கள் ஒன்றுமில்லாதவர்கள் என்று நம்புகிறவர்களையே தேவன் இரட்சிக்கிறார். நொறுங்குண்டவர்களை இரட்சிக்கிறார். தங்கள் வெறுமை, ஏழ்மை, திக்கற்ற நிலைமை ஆகியவற்றை உணர்ந்து, தங்களை தாங்களே இரட்சித்துக்கொள்ள முடியாது என்று உள்ளாக உடைக்கப்பட்டவர்களையே தேவன் இரட்சிக்கிறார்.*

***சங்கீதம் 51:17, தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.***

*இது தேவனுடைய கிருபைக்கு நம்மை பாத்திரவானாக்கும் வெறுமையை உணரச்செய்யும் ஆவிக்குரிய இயலாமை.*

***ஏசாயா 57:15, நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்.***

*தங்கள் சுய நீதியைக் குறித்து மேன்மைப் பாராட்டிய பரிசேயர்களுக்கு முற்றிலும் முரணாய், தங்களின் ஆவிக்குரிய ஏழ்மை நிலையை உணருகிற மக்களைக் குறித்து தேவன் இவ்வார்த்தைகளைக் கூறுகிறார்.*

*இஸ்ரவேலர்கள் தங்களுடைய சுய நீதியை ஸ்தாபிக்க எண்ணினர் என்று பவுல் கூறுகிறார்.*

*ரோமர் 10:3, எப்படியென்றால், அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள்.*

*ஆவியில் எளிமை என்பது எதிர்ப்பதம்.*

*தன்னிடத்தில் எதுவுமேயில்லை என்று தன்னுடைய இயலாமையை மனப்பூர்வமாய் ஒத்துக்கொள்வது. இது முழங்காலில் நின்று உதவியை நாடுகிற சிந்தை.*

*உதாரணம்:*

***லூக்கா 18:9-10, அன்றியும், தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணின சிலரைக்குறித்து, அவர் ஒரு உவமையைச் சொன்னார்: 10. இரண்டு மனுஷர் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன்.***

*ஆயக்காரர்கள் மக்களின் பணத்தை அநியாயமாய் வசூலித்ததினால், அவர்கள் மக்களால் அநியாயக்காரர்கள் என்று கருதி ஒதுக்கப்பட்டனர். அந்த ஆயக்கார அனுமதியை அவர்கள் ரோமர்களிடமிருந்து குத்தகைக்கு வாங்கியிருந்தனர். ரோமர்கள் இஸ்ரவேலர்களின் எதிரிகள். அதுமட்டுமின்றி, அவர்கள் புறஜாதிகளாயிருந்தபடியால் இஸ்ரவேலர்களால் விரும்பப்படாதவர்களாகவும் இருந்தனர்.*

*இஸ்ரவேலில் வரிவசூலிக்கவேண்டும் என்றால் அந்த வரிவசூலிக்கும் அதிகாரத்தை ரோமர்களிடமிருந்து விலைகொடுத்து வாங்க வேண்டும். அவ்வாறு செய்யும்போது நீங்கள் வெளிப்படையாய் ரோமர்களுக்கு ஆதரவாகவும் இஸ்ரவேலர்களுக்கு துரோகிகளாகவும் மாறவேண்டியிருக்கும்.*

*இவர்களை யூத கலாச்சாரம் மிகவும் இழிவானவர்களாய் கருதியது. ஆலயத்தில் ஆயக்காரனும் பரிசேயனும் வருகிறார்கள்.*

***லூக்கா 18:11-13, பரிசேயன் நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். 12. வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்று, தனக்குள்ளே ஜெபம்பண்ணினான். 13. ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான்.***

*இதுவே ஒரு பிச்சைக்காரனுடைய சிந்தை. அவன் தன் முகத்தையும் கண்களையும் உயர்த்தாமல், தன் நிலையிலே நடுங்கி, தன் மார்பிலே அடித்துக்கொள்ளுகிறான்.*

***லூக்கா 18:14, அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்.***

*ஆகையால் இயேசு "ஆவியில் பிச்சைக்காரர்களாய் இருக்கிறவர்கள் பாக்கியவான்கள்" என்கிறார்.*

*ஆவியில் வெறுமையாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள்.*

*ஆவியில் தேவையோடிருக்கிறவர்கள் பாக்கியவான்கள்.*

*ஆவியில் பிச்சைக்காரர்களாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள்.*

*கூனி குறுகி, கெஞ்சுகிறவர்களிடத்தில் ஏதுமில்லை என்பதினால் அவர்கள் பாக்கியவான்கள். உன்னதமான பெரிய தேவனுக்கு முன்பாக தாங்கள் ஒன்றுமில்லை என்று தங்களுடைய ஆவிக்குரிய வெறுமையை உணருகிறவர்கள் பாக்கியவான்கள்.*

*நம் மத்தியில் பிரபலமானவர்கள், கதாநாயகர்கள், செல்வந்தர்கள் என்று செழிப்பின் உபதேசத்தைக் குறித்து அநேக வலியுறுத்தல்கள் உண்டு. ஆனால் துக்கமாயிருப்பதே சந்தோஷமாயிருப்பதற்கான வழி.*

***ஏசாயா** தன் ஆவியின் நொருங்குண்ட நிலைமையை உணர்ந்த பின்பே தேவனால் வல்லமையாய் பயன்படுத்தப்படுகிறார். **ஏசாயா** 6ஆம் அதிகாரத்தில் ஆலயத்தின் தரிசனத்தை அவர் பார்த்த பின்பே அந்த மாற்றம் நிகழுகிறது. **உசியா ராஜா** தன் **52ஆம் வயதில்** மரணமடைந்ததினால் அவர் ஆலயத்திற்கு போகிறார். உசியா ராஜா தேசத்தின் வெற்றிக்கு காரணமானவர். இஸ்ரவேலின் தேவனுடைய அரசாட்சிக்கு வழிவகுத்தவர். அவர்களின் சுற்றுபுற தேசத்தாரோடு ஒர் நல்லுறவை ஏற்படுத்தியிருந்தவர். பனிப்போரில் இஸ்ரலேர்களின் கை ஓங்கியிருந்தது. இஸ்ரவேலின் இராணுவம் வலிமை வாய்ந்ததாக இருந்ததினால் அவர்களின் எதிரிகளால் அவர்களை நெருங்க முடியவில்லை.*

*இஸ்ரவேலின் பொருளாதார நிலை மேம்பட்டிருந்தது. பயிர்களின் விளைச்சல் அதிகரித்தது. பொருளாதார ரீதியாக அவர்கள் உலகத் தரத்திற்கு உயர்;ந்திருந்தனர். மேலும் மக்கள் அனைவரும் சரியான நேரத்திற்கு ஆலயத்திற்கு வந்து தங்களுடைய வெளியரங்கமான சடங்காச்சாரங்களை அனுசரித்தனர்.*

*ஆனால் தீடீரென்று தேசத்தின் மீது தேசத்தின் மீது வரவிருக்கிற கொடிய பஞ்சத்தை மக்களுக்கு அறிவித்து, மக்களின் அழிவை அறிவிக்கும்படிக்கு ஏசாயா 5ஆம் அதிகாரத்தில் தேவன் நியாயத்தீர்ப்பு அறிவிக்கிறார். அந்த நியாயத்தீர்ப்பும் நிறைவேறுகிறது.*

*இந்த அழிவைக் குறித்த நியாயத்தீர்ப்பு செய்தியை ஏசாயா தீர்க்கதரிசியும் **ஐந்து ஐயோ புலம்பல்களாக** பதிவிடுகிறார். அதை தேவனிடத்தில் உறுதிப்படுத்திக்கொள்ளும்படிக்கு ஆலயத்திற்கு கடந்து செல்லுகிறார்.*

*தேவன் என்பவர் தண்டனையினால் ஜனங்களை அழிப்பவர் அல்ல, மாறாக, அவர்களை நியாயந்தீர்ப்புக்கு பாத்திரவானாக்காமல் அவர்களை பாதுகாக்கவேண்டியவர். இதை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. எனவே தேவனுடைய தரிசனத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்காய் ஆலயத்திற்குச் செல்லுகிறார்.*

*தேவனுடைய தரிசனத்தைப் பார்த்த மாத்திரத்தில் அவர் உடைக்கப்பட்டு நொருங்கிப்போனார். 6ஆம் அதிகாரத்தில் "**எனக்கு ஐயோ**" என்று ஏசாயா குறிப்பிடுகிறார். ஐயோ என்ற பதத்தை 5ஆம் அதிகாரத்தில் இஸ்ரவேலுக்கு நேரிடப்போகிற அழிவைக் குறிப்பதற்கு ஆறு முறை பயன்படுத்துகிறார். தற்போது அந்த பதத்தை தனக்காகவே பயன்படுத்தி தன்னையே சபித்துக்கொள்ளுகிறார்.*

*“யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான்?” என்று தேவன் கேட்கிறார். “நியாயத்தீர்ப்பிற்கு உட்பட்டிருக்கிற இந்த ஜனங்களிடத்திற்குப் போகிற பிரசங்கியார் எனக்கு வேண்டும். அவர்களை மனந்திரும்புதலுக்கு அழைக்கிற பிரசங்கியார் வேண்டும். யார் போவார்?”*

*அந்த இடத்தில் ஒரேயொரு மனிதன் தான் நிற்கிறார். அது ஏசாயா தீர்க்கதரிசியே. அவர் இப்போது பதிலளிக்கவேண்டும். “இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும்” என்று ஏசாயா பதிலளிக்கிறார்.*

*ஏசாயா தன் தலையை தரையை நோக்கிக் கவிழ்த்து, தன் கண்களை ஏறெடுக்கத் துணியாமல், தன் இரண்டு கரங்களையும் தலையின் மீத குவித்து, “இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும்” என்று தேவன் தன்னை உடைக்க பூரணமாய் ஒப்புக்கொடுக்கிறார். “நான் எதிர்பார்க்கிற மனிதன் நீ தான், எழுந்து புறப்படு” என்று தேவன் சொல்லுகிறார்.*

*பராக்கிரமசாலியாகிய **கிதியோன்** தன்னை யார் என்று சரியாய் அடையாளம் கண்டுகொண்டதால் தேவன் அவனை வல்லமையாய் எடுத்துப் பயன்படுத்துகிறார்.*

***நியாயாதிபதிகள் 6:15-16, அதற்கு அவன்: ஆ என் ஆண்டவரே, நான் இஸ்ரவேலை எதினாலே ரட்சிப்பேன்; இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது; என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றான். 16. அதற்குக் கர்த்தர்: நான் உன்னோடேகூட இருப்பேன். ஒரே மனுஷனை முறியஅடிப்பதுபோல நீ மீதியானியரை முறிய அடிப்பாய் என்றார்.***

*தனக்கு பின்னாலிருந்து செயல்படப்போகிற ஒருவரிடம் பேசிக்கொண்டிருக்கிறோம் என்று கிதியோன் ஒருவேளை எண்ணியிருக்கலாம்.*

*தகுதியில்லாத உணர்வே ஆசீர்வாதத்திற்கும் மகிழ்ச்சிக்குமான பாதை.*

***மோசே** தன்னை தேவனுடைய பணிக்கு தகுதியில்லாதவன் என்று உணர்ந்தார். தேவன் இஸ்ரவேலர்களை வழிநடத்தும் பொறுப்பை மோசேயிடம் ஒப்படைக்கிறார். மோசே “என்னால் வழிநடத்த முடியாது, நான் திக்குவாயன்” என்று சொல்லுகிறார். தேவன் அவரைப் பார்த்து, “வாயை உண்டாக்கியது யார்?” என்று கேட்கிறார்.*

*அவருடைய இயலாமையைக் குறித்து தேவன் தெளிவாய் அறிந்திருந்தார்.*

***தாவீதும்**, “தேவனே, என்னை அனுப்ப நான் எம்மாத்திரம்? உமக்கு இங்கு யார் இருக்கிறார் என்று புரிகிறதா?” என்று கேட்கிறார்.*

*புதிய ஏற்பாட்டில் **பேதுருவை** நாம் பார்க்கமுடியும். துணிகரமான, சுய மேட்டிமையான, சுயத்தின் மீது நம்பிக்கைக் கொண்டிருந்த மனிதன். ஆனால் தேவனுடைய சமூகத்தில் நொருங்கினவனாய், “ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னைவிட்டுப்போகவேண்டும்” என்றார்.*

***பவுல்** அப்போஸ்தலரும் தன்னுடைய மாம்சத்தில் ஒரு நன்மையும் இல்லை என்று அறிந்திருந்தார். அவர் பாவிகளில் பிரதான பாவி. அவர் தேவனை தூஷித்தவர். அவர் துன்பப்படுத்தியவர். அவர் இலாபமான அனைத்தையும் குப்பையாய் கருதினார். அவைகளை நஷ்டமென்று கருதினார். அவருக்கு மாம்சத்தின் மீது நம்பிக்கை இல்லை. அவர் எதைச் செய்வதற்கும் தகுதியற்றவர். அவருடைய பெலவீனத்தில் தான் அவருடைய பெலன் விளங்கியது.*

*தேவனுடைய இராஜ்யம் இங்கிருந்தே துவங்குகிறது. அனைத்தின் துவக்கமும் இதுவே. ஆனால் அத்தோடு இது முடிவடைவதில்லை.*

*நீங்கள் ஒன்றுமில்லை என்று உங்களுடைய இயலாமையைத் தொடர்ந்து ஒத்துக்கொள்ளும் போது நீங்கள் தேவனுடைய இராஜ்யத்தில் தொடர்ந்து இருக்க தகுதிபடுத்தப்பட்டு, உங்களுடைய பெலன் உங்களுக்கு உண்டாகிறது.*

*கடினமான பாவிகளுக்கு இதைச் செய்வது கடினமான காரியம். ஏனென்றால் இவர் மெய்யான தெய்வத்தை வழிபடாமல், தாங்கள் கண்டுபிடித்த தெய்வத்தையே வழிபடுகின்றனர். அவர்களே உண்டாக்கிக்கொண்ட பலிபீடத்தின் முன்பு விழுந்து பணிகின்றனர். எனவே கடினமான பாவிகளுக்கு தாங்கள் ஒன்றுமில்லாதவர்கள் என்று ஒத்துக்கொள்வதே அவர்கள் செய்யவேண்டிய கடினமான காரியம்.*

*தாங்கள் தேவனுடைய இராஜ்யத்திற்குள் ஏற்கனவே வந்துவிட்டோம் என்று நம்பிக்கொண்டிருக்கிற யூதர்களுக்கு இயேசு இதைச் சொல்லுகிறார். நீங்கள் நினைக்கிற வரையறைகளைக் கொண்டு தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியாது. தேவனுடைய வரையறைகளின்படியே அதற்குள் பிரவேசிக்கமுடியும்.*

***யோவான் 7:34, நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும் என்னைக் காணமாட்டீர்கள்; நான் இருக்கும் இடத்திற் நீங்கள் வரவுங்கூடாது என்றார்.***

***ஏன்?***

*ஏனென்றால் நீங்கள் என்னுடைய இராஜ்யத்தில் இல்லை.*

*அங்கிருந்தே இரட்சிப்பு துவங்குகிறது, ஆசீர்வாதம் துவங்குகிறது, மகிழ்ச்சி துவங்குகிறது. அத்துடன் அங்கு,*

- *பெருமைகள் எதுவும் இல்லை*
- *சுய நம்பிக்கை ஏதுமில்லை.*
- *சுய நீதிகள் இல்லை.*
- *சுய உறுதி இல்லை*
- *சுயத்தை சார்ந்திருப்பதில்லை.*

*தேவனுக்கு முன்பாக நாம் ஒன்றுமில்லை என்பதே இந்த அங்கீகாரத்திற்கு நம்மை பாத்திரவானக்குகிறது. இந்த வெறுமையை உணராதபட்சத்தில் நிரப்பப்படுதல் சாத்தியமேயில்லை.*

***புனித அகஸ்டின்,*** *தன்னுடைய இரட்சிப்பிற்கு முன்பு தன்னுடைய அறிவை எண்ணி பெருமையோடிருந்தவர். அகஸ்டின் அறிவில் தேறிய ஞானி என்பதினால் தன்னுடைய ஞானத்தைக் குறித்து மேன்மையாய் எண்ணியிருந்தார். ஆனால் தன்னுடைய ஞானத்தை வெறுமையாக்கிய பின்னரே தேவனுடைய மெய்யான ஞானத்தை தான் பெற்றுக்கொண்டதாக அவரே அறிவிக்கிறார்.*

***மார்டின் லூத்தர்*** *தன்னுடைய வாலிப பிராயத்தில் துறவறம் மேற்கொண்டார். இரட்சிப்பை அடைவதற்காய் அந்த முயற்சியை ஏறெடுத்தார். பக்தியுடன் வாழ்வதினாலும் புண்ணிய காரியங்கள் செய்வதினாலும் இரட்சிப்பை அடைவது சாத்தியம் என்று நம்பியிருந்தார்.*

*ஆனால் துறவற மடத்தில் இருந்த வரை மார்டின் லூத்தரால் திருப்தியடைய முடியவில்லை. அவர் குற்ற மனசாட்சியினால் ஆட்கொள்ளப்பட்டார். கடவுளை திருப்திபடுத்த முடியாது என்னும் மனிதனின் இயலாமையை அறியத் துவங்கினார். தன்னுடைய இரட்சிப்பை அடைய ஏறெடுத்த முயற்சிகளை கைவிட்டு, தன்னை முற்றிலும் வெறுமையாக்கினார். விசுவாசத்தினால் கிருபையைக் கொண்டு தேவன் அவரை இரட்சித்தார்.*

*தான் தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கவே முடியாது, அதற்கான தகுதி நமக்கில்லை என்று உணர்வதே தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கான முதல் தகுதி.*

*உங்களுடையதைக் கொண்டு தேவனை பிரியப்படுத்த முடியாது. உங்களால் அதை செய்யவே முடியாது. ஒரு சில நியாயப்பிரமாண விதிகளை நீங்கள் கைக்கொள்ளலாம். ஆனால் அனைத்தையும் கைக்கொள்ள உங்களால் முடியாது.*

*அதில் எதையாகிலும் நீங்கள் மீறிவிட்டீர்கள் என்றால் தேவனுடைய நியாயப்பிரமாணம் அனைத்தையும் நீங்கள் மீறியதாக அர்த்தம்.*

***மத்தேயு 5:48, ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்.***

*பரிசேயர்கள் மற்றும் வேதபாரகர்களின் நீதியைக் காட்டிலும் உங்களுடைய நீதி அதிகமாயிருக்கவேண்டும்.*

*தேவன் எந்த அளவிற்கு பூரண சற்குணராயிருக்கிறாரோ, அந்த அளவிற்கு நீங்களும் பூரண சற்குணராயிருக்க வேண்டும்.*

*நீங்கள் தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கவேண்டும் என்றால், நீங்கள் தேவனைப் போல் பூரண சற்குணராகவும் பரிசுத்தராகவும் இருக்கவேண்டும். யாரும் தகுதியுள்ளவர்களில்லை.*

*புதிய ஏற்பாட்டின் துவக்கத்தில் இடம்பெற்றுள்ள இயேசுவின் போதனையின் துவக்கத்திலேயே, தேவனுடைய வரையறைகளை மனிதனால் நிறைவேற்றவே முடியாது என்றும், மாம்ச முயற்சியினால் தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியாது என்னும் சத்தியத்தை ஸ்தாபிக்கிறார்.*

*இந்த செய்தியை ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்த கூட்டம் இயேசுவை கொலை செய்தது. ஏனென்றால் அது கடினமான செய்தி.*

*தங்களுடைய சுய முயற்சியினால் பரலோக இராஜ்யத்தை சுதந்தரிக்க விரும்புகிறவர்கள் இன்று இருக்கின்றனர். தங்களுடைய மார்க்க மற்றும் ஒழுக்க ரீதியான சாதனைகளை வைத்து அவ்வாறு செய்ய முயற்சிக்கின்றனர்.*

*எவரும் தங்களுடைய இரட்சிப்பை அடைவது சாத்தியமில்லை என்பதே மனிதனின் இயலாமை. அதாவது, நியாயப்பிரமாணத்தின் விதிகளைக் கைக்கொள்வதினாலும், மாம்சத்தின் கிரியைகளை செய்வதினாலும் ஒருவன் தேவனால் நீதிமானக்கப்படுவதில்லை.*

***ரோமர் 3:19-20, மேலும், வாய்கள் யாவும் அடைக்கப்படும்படிக்கும், உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவானவர்களாகும்படிக்கும், நியாயப்பிரமாணம்***

சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம். 20. இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை.

ஆவியில் எளிமை என்று இயேசு போதித்தது இது தான். வறுமையில் கதறி அழுது, தங்களுடைய வாழ்க்கையில் தகுதியானது என்று ஏதுமில்லை என்று உணருவதே, தேவனுடைய இரட்சிப்பை சாத்தியமாக்குகிறது.

### 3. இந்த சிந்தையின் விளைவு என்ன?

**வச. 3, பரலோகராஜ்யம் அவர்களுடையது.**

இது ஒரு சிறப்பான கருப்பொருள்!

"அவர்களுடையது" என்பதற்கு கிரேக்கத்தில் பயன்படுத்தப்பட்ட வார்த்தை அவர்களுக்கு மட்டுமே உரியது என்று அர்த்தங்கொள்ளுகிறது. தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிக்க விரும்புகிற அநேகர் மத்தியில் கெஞ்சுகிற சுத்த இருதயத்தோடு இருப்பவர்களுக்கு மட்டுமே தேவன் பரலோக இராஜ்யத்தை சாத்தியமாக்குகிறார்.

பரலோகராஜ்யம் அவர்களுடையது!

இது ஆயிர வருட அரசாட்சியல்ல. இது பரலோகத்தோடு முடிந்துவிடுகிற ஆசீர்வாதம் இல்லை. நித்திய ஆசீர்வாதங்களான புதிய வானம் மற்றும் புதிய பூமியை வாக்குப்பண்ணும் ஆசீர்வாதம். பரலோகராஜ்யம் அவர்களுடையது.

பரலோகம் என்பதும் தேவன் என்பதும் வேறுவேறல்ல. "தேவனுடைய இராஜ்யம்" "பரலோக இராஜ்யம்" என்னும் சொற்றொடர்களை புதிய ஏற்பாடு ஒரே அர்த்தத்திலேயே பயன்படுத்துகிறது. தேவனையும் கிறிஸ்துவின் ஆட்சியையும் குறிப்பதற்கு தேவனுடைய இராஜ்யம் என்னும் தலைப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்துவே தேவனுடைய இராஜ்யத்தின் ராஜா.

நீங்கள் தேவனுடைய இராஜ்யத்திற்கு வந்து, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஆளுகைக்கு உட்பட்டு, இராஜ்யத்தின் அனைத்து ஆசீர்வாதங்களையும் சுதந்தரித்துக்கொள்ளுவீர்கள் என்று அர்த்தம்.

- பூமியில் உண்டாகப்போகிற ஆயிர வருட ஆட்சியையும் இது உள்ளடக்குகிறது. வெளிப்படுத்தின விசேஷத்தின் 20ஆம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளபடி, மகிமையான ஆயிர வருட அரசாட்சியில் நீங்களும் இருப்பீர்கள்.
- வெளிப்படுத்தின விசேஷம் 21 மற்றும் 22ஆம் அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள புதிய வானம் மற்றும் புதிய பூமி என்னும் நித்திய ஆசீர்வாதங்களையும் உள்ளடக்கியது.
- இதற்கு நிகழ்கால பாதிப்பும் உண்டு. நீங்கள் இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கிறீர்கள். அது உங்களுடையதாய் மாறுகிறது. இயேசு கிறிஸ்துவோடு சேர்ந்து பரலோக

*இராஜ்யத்தின் அனைத்து ஆசீர்வாதங்களுக்கும் பங்குதாரர்களாய் நாம் மாறுகிறோம்.*

*தேவனுடைய ஆசாரியர்களுக்கு* **வெளிப்படுத்தல்** *1ஆம் அதிகாரம் அதைச் சொல்லுகிறது.* **வெளிப்படுத்தல்** *5ஆம் அதிகாரம் மீண்டும் அதை உறுதிப்படுத்துகிறது. நாம் ஜெயம்பெறுகிறவர்களாயிருக்கிறோம். அந்த நம்பிக்கையில் வெல்கிறோம்.*

- *நமக்கு இப்போது இராஜ்யத்தின் ஆசீர்வாதம் இருக்கிறது.*
- *இராஜ்யத்தின் கிருபை நமக்கு இருக்கிறது.*
- *இராஜ்யத்தின் இரக்கம் நமக்கு இருக்கிறது.*
- *இராஜ்யத்தின் சமாதானம் நமக்கு இருக்கிறது.*
- *இராஜ்யத்தின் சந்தோஷம் நமக்கு இருக்கிறது.*
- *இராஜ்யத்தின் ஞானம் நமக்கு இருக்கிறது.*

***ஏன்?***

*ஏனென்றால் நாம் ராஜாவுடைய சொந்தங்கள். இராஜ்யத்தின் மகிமைக்கு நாம் பங்குதாரர்கள். சர்வ மகத்துவம் பொருந்திய ராஜா அவருடைய சொந்தங்களை பொறுப்பெடுத்துக்கொள்ளுகிறார்.*

*சோர்ந்துபோகும் நேரங்களில் இராஜ்யத்தின் உற்சாகப்படுத்தும் ஆசீர்வாதம் நமக்குக் கிடைக்கிறது.*

*இராஜ்யத்தின் கையேடாகிய ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தையின் மூலமாய் இராஜ்யத்தின் ஞானம் நமக்கு கிடைக்கிறது.*

*அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகிய அனைத்து ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் நம்முடையதாகிறது.*

*இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களையும், மகிமையான எதிர்காலத்தைக் குறித்த வாக்குறுதியையும், நாம் மகிமையை அடையும் வரை பரிசுத்தமாகுதலின் உறுதியையும், நாம் ராஜாவின் சொந்தங்கள் என்பதினால் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்னும் வாக்குறுதியையும் ஆவியின் கனிகள் உள்ளக்கியுள்ளது. கிறிஸ்துவுக்குள் அனைத்தையும் நாம் அனுபவிக்கக்கூடிய ஆசீர்வாதமே தேவனுடைய இராஜ்யத்தின் மகிமை.*

## *முடிவுரை:*

*ஜனங்கள் ஆவியில் எளிமையுள்ளவர்களாயும், அதைக் குறித்து துக்கிக்கிறவர்களாயும் இருக்கவேண்டும் என்று பிரசங்கிக்கப்பட்டது. கிருபையின் காலத்தில் நாம் அதைச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. நாம் செய்ய வேண்டியதெல்லாம், இயேசுவை விசுவாசித்தால் மட்டும் போதும். நாம் அதற்கு தகுதிப்படுத்தப்படுகிறோம். உங்களுடைய ஆவிக்குரிய நிலையில் நீங்கள் மேன்மையுள்ளவர்கள் என்று எண்ண வேண்டிய அவசியமில்லை.*

*இந்த சத்தியத்திற்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது. இராஜ்யம் இங்கேயிருக்கிறது, அது உங்களுக்குள் வந்திருக்கிறது என்று இயேசு சொன்ன அந்த இராஜ்யத்தின் பிரதிநிதிகளாய் இன்று நாம் மாறியிருக்கிறோம்.*

*கிறிஸ்துவின் மூலம் தேவனுடைய இராஜ்யத்தின் அனைத்து ஆசீர்வாதங்களுக்கும் நீங்கள் பிரதிநிதிகளாய் மாற்றப்பட்டுள்ளீர்கள். அதினால் தான் நீங்கள் மகிழ்ச்சியாயிருக்கிறீர்கள். அதினால் தான் ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள் என்று அவர் சொல்லுகிறார்.*

***ஏன்?***

*ஏனென்றால் அவர்கள் தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசித்து, அதில் உள்ள அனைத்து ஆசீர்வாதங்களையும் சுதந்தரித்துக்கொண்டனர்.*

*என்னுடைய மேற்பரப்பான சந்தோஷத்தை நீங்கள் குலைக்கலாம். ஆனால் என்னுடைய இருதயத்தின் ஆழத்தில் ஏற்பட்டுள்ள மனநிறைவை உங்களால் தொட முடியாது. ஏனென்றால், என்னுடைய நித்தியத்திற்கு தேவையான அனைத்து ஆசீர்வாதங்களும் எனக்கு உறுதிசெய்யப்பட்டாயிற்று.*

- *நான் இராஜ்யத்தில் இருக்கிறேன்.*
- *எனக்கு இராஜ்யத்தின் சமாதானம் கிட்டியிருக்கிறது.*
- *எனக்கு இராஜ்யத்தின் கிருபை கொடுக்கப்பட்டுள்ளது.*
- *எனக்கு இராஜ்யத்தின் இரக்கம் அருளப்பட்டிருக்கிறது.*
- *எனக்கு இராஜ்யத்தின் வல்லமை கொடுக்கப்பட்டுள்ளது.*
- *எனக்கு இராஜ்யத்தின் சத்தியம் கொடுக்கப்பட்டுள்ளது.*
- *எனக்கு எல்லாம் இருக்கிறது!*

*நான் இராஜ்யத்தில் ராஜாவின் பொறுப்பில் இருப்பதால், இந்த உலகத்தில் முக்கியமானவை என்று கருதும் அனைத்தும் எனக்கு பொருட்டல்ல.*

*நான் ராஜாவின் சொந்தம். நான் ராஜாவின் பிள்ளை! ராஜகுமாரன்.*

*ராஜா தன்னுடைய ராஜ பெட்டகத்தின் ஐசுவரியத்தைக் கொண்டு என்னையும் உங்களையும் பராமரிக்கிறார். ஏனென்றால் நாம் அவருடைய இராஜ்யத்தில் இருக்கிறோம். தங்களுடைய ஆவிக்குரிய வெறுமையை உணராத எவரும் அந்த இராஜ்யத்தில் இடம்பெறவில்லை.*

***ஐசுவரியவானாயிருந்த ஒரு வாலிபன்** இயேசுவிடத்தில் வந்து, ''நித்திய ஜீவனுக்குப் போக நான் என்ன செய்யவேண்டும்'' என்று கேட்கிறான்.*

*இது மிகவும் அழகான மற்றும் சரியான கேள்வி.*

***மத்தேயு** 19ல் அவர் ஒரு ஆளுநர். சினகாக் தேவாலயத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஆளுநர்களில் ஒருவராய் இருக்கக்கூடும். அதாவது, அங்கிருந்த எல்லோரைக் காட்டிலும் மதவுணர்வில் தேறினவனாக இருக்கவேண்டும்.*

*இயேசு நியாயப்பிரமாணத்தைக் கடைபிடிக்கும்படிக்கு சொல்லுகிறார். அது நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்கும் ஒரு வழி. ஆனால் அதை யாராலும் கடைபிடிக்க முடியாது என்று சொல்லலாம். பத்துக் கற்பனைகளில் ஆறு கற்பனைகளை இயேசு அவனிடத்தில் வரிசைப்படுத்துகிறார்.*

*நான் அவைகளையெல்லாம் கடைபிடித்துக்கொண்டு தான் இருக்கிறேன் என்று அவன் சொல்லுகிறான்.*

*இயேசு அவனிடத்தில் "நித்திய ஜீவனை அடைவதற்கு இன்னொரு வழி இருக்கிறது. உனக்கு உண்டானவைகளை விற் , தரித்திரருக்குக் கொடு." அதைக் கேட்ட அவன், துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான்.*

***ஏன்?***

*அவன் சரியான கேள்வியைக் கேட்காததினால் அல்ல. ஆனால் அவன் செய்ய விரும்பாத இரண்டு காரியங்கள் உண்டு.*

1. *தன்னுடைய ஆவிக்குரிய ஏழ்மை நிலையை உணர்ந்து, அவன் நியாயப்பிரமாணத்தை தொடச்சியாகவும், முடிவில்லாமலும் மீறிக்கொண்டு தான் இருக்கிறோம் என்பதை உணரவில்லை.*

2. *அவன் கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பவில்லை. இயேசு அவனுக்கு எளிமையான கற்பனையைக் கடைபிடிக்கச் சொல்லுகிறார். ஐசுவரியவான் அதை மறுத்துவிட்டான்.*

*இயேசுவே தேவன் என்னும் விசுவாசம் அவனுக்கில்லை. கிறிஸ்துவுக்கும் கீழ்ப்படிய விரும்பவில்லை. பாவத்தைக் குறித்த எந்த உணர்வும் அவனுக்கு இல்லை.*

*அவன் தேவனுடைய இராஜ்யத்திற்கு வெளியே நிற்கிறான். அவன் ஆவியில் எளிமையாய் மாறுவது சாத்தியமேயில்லை. அவன் வந்தவழி தெரியாமல் திரும்பிப்போனான்.*

*இயேசு அவனை போக அனுமதித்திருக்கக்கூடாது. ஜெபம் பண்ணு, கைகளை உயர்த்து, இந்த பாதையில் நட என்று எதையாவது சொல்லியிருக்கவேண்டும்.*

*ஆனால் இயேசு அப்படி செய்யவில்லை. இயேசு நிஜமான பிரச்சனைக்குள் வருகிறார். நீ பாவி என்பதையும், உன் இயலாமையையும், உன்னுடைய வெறுமையையும் உணராமல் என்னுடைய இராஜ்யத்திற்குள் நீ பிரவேசிக்க முடியாது. அவன் அதை ஒத்துக்கொள்ளாத போது, சொல்லுவதற்கு ஏதுமில்லை.*

## ***ஒருவன் ஆவியில் எளிமையுள்ளவனாய் எப்படி மாறுகிறான்?***

***1. உன்னை தேவனோடு ஒப்பிட்டுக்கொள்.***

*மற்ற சராசரி மக்களோடு உன்னை ஒப்பிட்டுக்கொள்வதை நிறுத்துங்கள்.*

***நீ தேவனைப் போல பரிசுத்தமுள்ளவனா?***

*இல்லையென்றால், நீ பாவி.*

*1 பேதுரு 1:16, நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே.*

*மத்தேயு 5:48, ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்.*

***நீங்கள் பூரண சற்குணரா?***

*இதற்கு உங்களுக்கு பதில் கிடைக்கவில்லை என்றால் தேவனைக் குறித்து படித்து அறிய முற்படுங்கள். தேவனுடைய வார்த்தையை வாசியுங்கள். அதின் பக்கங்களில் அவருடைய ஆளத்துவத்தை சந்தியுங்கள்.*

*தேவனை நோக்கிப் பாருங்கள். தேவனை நேரடியாய் பார்க்கவேண்டும் என்று விரும்பினால், மாம்சத்தில் அவதரித்த இயேசு கிறிஸ்துவைப் பாருங்கள். நீங்கள் தேவனை எந்த அளவிற்கு பார்க்கிறீர்களோ, அந்த அளவிற்கு தேவனுடைய குணாதிசங்களையும் சுபாங்களையும் அவருடைய பூரணமான பரிசுத்தத்தையும் பார்க்கிறீர்கள். உங்களுடைய ஆவிக்குரிய நிலையை முழுமையாய் உணரும்போது அவைகளை இயேசு கிறிஸ்துவில் பார்க்கிறீர்கள்.*

***2. ஜெபியுங்கள்***

*பிச்சைக்காரர்கள் கெஞ்ச வேண்டும்!*

*உங்களுடைய வெறுமையான நிலைமையை நீங்கள் உணரும்போது, அவரிடத்தில் விண்ணப்பிப்பதற்கு அதுவே சரியான நேரம்.*

***எதைக் கேட்க வேண்டும்?***

*"பாவியாகிய என் மேல் கிருபையாயிரும்" என்று கேட்பது எப்படியிருக்கும். பழைய ஏற்பாடு முழுவதிலும் ஜனங்கள் அப்படித் தான் இரட்சிப்பை பெற்றிருக்கின்றனர்.*

*லூக்கா 18 ஜெபம்!*